செய்தி வெளியீடு எண்:026 நாள் : 12.01.2016

செய்தி வெளியீடு

# திரைப்படத் துறையினர் நலவாரியக் குழுக் கூட்டம்

## திரைப்படத்துறையை சேர்ந்த 1069 பயனாளிகளுக்கு ரூபாய் 31 இலட்சத்து 37ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள் தகவல்

திரைப்படத் துறையினர் நலவாரியக் குழுவின் கூட்டம் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (12–01–2016) தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை பொதுப் பணித்துறை கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், திரைப்படத்துறையை சேர்ந்த 1069 பயனாளிகளுக்கு ரூபாய் 31 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் திரைப்படத்துறையினர் நலவாரியம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர். மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குனரும் திரைப்படத் துறையினர் நலவாரியத்தின் உறுப்பினர் செயலாளருமான திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி திரைப்படத் துறையினர் நலவாரியம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் 2011ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் 38 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 98 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு மே திங்களில் 426 பயனாளிகளுக்கு ரூ.11 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் 302 பயனாளிகளுக்கு ரூ.10 இலட்சத்து 14 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் 303 பயனாளிகளுக்கு ரூ.8 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இதுவரை 1,069 பயனாளிகளுக்கு ரூ.31 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

திரைப்படத்துறையினர் நலவாரியத்தில் தற்போது 20,000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். புதிய உறுப்பினர் சேர்க்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. திரைப்படத்துறையினர் நலவாரியத்தில் நலத்திட்ட உதவிகள் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு சிரமமின்றி உதவித்தொகை பெற்றிடும் வகையில் மின்மாற்று (ECS) முறையில் உறுப்பினர்களின் வங்கி கணக்கில் உதவித்தொகை வரவு வைக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க அரசின் மூலம் 2012–13ஆம் நிதியாண்டு முதல் பட்டயப்படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்பு செலவிற்காக ஒரு மாணவருக்கு ஒரு பட்டயப் படம் தயாரிக்க அளிக்கப்படும் நிதியுதவி ரூபாய் 8,000/–லிருந்து ரூபாய் 15,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2012–2013ஆம் நிதியாண்டில் எம்.ஜி.ஆர்.அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் அமையப்பட்டுள்ள முன்காண் திரையரங்கம் ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் திரைப்படத்துறையில் நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப சிறந்த முறையில் விளங்கிட ரூ.9.50 கோடி மதிப்பீட்டில், 2013–2014ஆம் கல்வியாண்டில் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் எனும் புதிய பட்டயப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

சென்னையில் கடந்த 2014–2015ஆம் ஆண்டில் நடைபெற்ற ''சென்னை சர்வதேச திரைப்பட விழா'' வில், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் 5 பட்டயக் குறும்படங்கள் போட்டியிட்டு ''சீ'' என்ற பட்டயக் குறும்படம் **''அம்மா''** விருதினை பெற்றுள்ளது.

எம்.ஜி.ஆர்.அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தரமணி வளாகத்தில் செயல்படத்தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, இந்நிறுவன வளாகத்தில் பொன்விழா முகப்பு வளைவு மற்றும் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவுச் சிலை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தமிழ் நாட்டில் பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வளர்ந்து வரும் நவீனத்திற்கு ஏற்ப கலைத்துறையில் புதிய யுத்திகளை உருவாக்கி கலைத்துறையின் வளர்ச்சிக்கு பாடுபட்டு வருகிறார்கள் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறப்பான முறையில் செயல்பட்டு வரும் திரைப்படத் துறையினர் நலவாரியத்தின் செயல்பாட்டினை மேலும் சிறப்பிக்கும் வகையில் உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அறிந்து அதற்கேற்ப உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதி அளிக்கிறேன். பல்வேறு அலுவலுகளுக்கிடையே இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த குழு உறுப்பினர்களுக்கும், ஏனைய அரசுத்துறை அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என அமைச்சர் தெரிவித்தார்.

கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.கு.தாணப்பா நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் தொழிலாளர் நலத்துறை ஆணையர் திருமதி. எஸ்.அமுதா, திரைப்படத் துறையினர் நலவாரிய உறுப்பினர்கள் திரு.ஆர்.வி.உதயகுமார், திரு.பி.வாசு, திரு.லியாகத் அலிகான், திரு.மோகன் காந்திராமன், திருமதி.டி.கே.கலா, நிதித்துறை இணைச் செயலர், தொழிலாளர் நலத்துறை கூடுதல் ஆணையர், வணிகவரித்துறை கூடுதல் ஆணையர், உள்துறை துணைச் செயலாளர் (சினிமா), தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை துணைச் செயலர், மற்றும் பிற துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**